(திருச்சபைக்காக, பேராயத்திற்காக, மாநிலத்திற்காக, நாட்டிற்காக மற்றும் உலகத்திற்காக சிறப்பு தேவைகளை ஏறெடுத்தல்)

நடத்துபவர்: மனதுருக்கமுள்ள கடவுளே, உமது திருமைந்தன் இயேசு கிறிஸ்து வழியே உமது மக்களை உமக்குள்ளாக ஒப்புரவாக்கிக் கொண்டீர்.

அனைவரும்: நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியில் ஜெபித்து உபவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து, அவரது தூய்மையான அன்பில் நாம் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்ய அருள் புரிவாராக. ஆமென்.

13. ஆண்டவர் கற்றுத் தந்த மன்றாட்டு

14. இறையாசி

கர்த்தரானவர் உன்னை ஆசீர்வதித்து உன்னைக் காப்பாராக; கர்த்தரானவர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப் பண்ணி உன்மேல் கிருபையாய் இருப்பாராக; கர்த்தரானவர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி உனக்குச் சமாதானம் கட்டளையிடுவாராக. ஆமென்.

15. நிறைவுப் பாடல்

16. அமைதியாகக் கலைந்து போதல்

அனைவரும்: ஆம், நாம் மண்ணிலிருந்து உருவானவர்கள் என ஆண்டவர் நினைவு கூருகிறார்.

நடத்துபவர்: ஆண்டவரது அன்பு நித்திய நித்தியத்திற்கும் நிலையானது, தமக்குப் பயந்தவர்கள் மீதும் தமது உடன்படிக்கையில் நடப்போர் மீதும் தமது கட்டளைகளைப் பின்பற்றுவோர் மீதும் அவர்கள் மீதும் பிள்ளைகளின் பிள்ளைகளின் மீதும் உள்ளது.

அனைவரும்: நாம் மண்ணிலிருந்து உருவானவர்கள் என ஆண்டவர் நினைவு கூருகிறார். ஆமென்.

நடத்துபவர் : வேண்டிக் கொள்வோமாக.

அனைவரும்: வல்லவரும் என்றும் அன்புள்ளவருமான கடவுளே, எங்கள் படைப்பாளராம் உமக்கு முன்பாக எங்களைத் தாழ்த்துகிறோம். எங்கள் எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் பாவத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறோம், எங்களை மன்னித்தருளும். உமது உன்னத அழைப்பை மனதில் இருத்திக் கொண்டவர்களாகவும் உமது நம்பிக்கையில் நிலைத்திருக்கவும் செய்தருளும். உமது இரக்கத்தில் எங்களை மீட்டருளும். என்றும் வாழ்பவரும் உம்மோடும் தூயாவியோடும் ஒரு கடவுளாய் என்றென்றும் அரசாளும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியே உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

4. அமைதியாக வேண்டிக் கொள்ளுதலும் ஆழ்ந்து சிந்தித்தலும்

நடத்துபவர்: நாம் ஜெபத்துடன் நமது உள்ளங்களை ஆராய்ந்து பார்போம்..... கிறிஸ்து எங்களுக்குச் சேவை புரிந்தது போலச் செய்யாமல், உமது அழைப்புக்குச் செவி கொடாமற் போனோம். கிறிஸ்துவின் சிந்தை எங்களில் இல்லை. உமது தூயவியானவரைத் துக்கப் படுத்தினோம்.

அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மேல் இரக்கமாயிரும்.

நடத்துபவர்: எங்கள் கடந்த கால விசுவாசமின்மை, பெருமை, கூடடு மற்றும் பொறுமையின்மை இவைகளை உம்மிடம் அறிக்கை செய்கிறோம்.

அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மேல் இரக்கமாயிரும்.

நடத்துபவர்: எங்களது தீராத தன்னுகர்ச்சிகள் மற்றும் பிறரைச் சுரண்டுதல் இவைகளை உம்மிடம் தாழ்மையாக அறிக்கைச் செய்கிறோம்.

அனைவரும்: ஆண்டவரே, உம்மிடத்தில் நாங்கள் அறிக்கை இடுகிறோம்.

நடத்துபவர்: எங்கள் பதற்றத்தால் எங்கள் மீது ஏற்பட்ட கோபம் மற்றும் எங்களைக் காட்டிலும் பெறு பெற்றவர்களைப் பார்த்து நாங்கள் கொண்ட பொறாமை ஆகியவற்றை அறிக்கை செய்கிறோம்.

அனைவரும்: ஆண்டவரே, உம்மிடத்தில் நாங்கள் அறிக்கை இடுகிறோம்.

நடத்துபவர்: உலகப் பொருள்கள் மீதும் மனிதர்கள் மீதும் நாங்கள் கொண்ட மட்டற்ற மோகத்தையும், அன்றாட வாழ்விலும் எங்கள் வேலையிலும் உண்மையற்று இருந்தோம் என்பதையும், அறிக்கை செய்கிறோம்.

அனைவரும்: ஆண்டவரே, உம்மிடத்தில் நாங்கள் அறிக்கை இடுகிறோம்.

நடத்துபவர்: ஜெபம் மற்றும் வழிபாட்டைப் புறக்கணித்தோம் என்றும், எங்களுக்குள் இருக்கும் விசுவாசத்தைப் பாராட்டத்தக்க வகையில் தட்டி எழுப்பத் தவறினோம் என்பதையும் அறிக்கை செய்கிறோம்.

அனைவரும்: ஆண்டவரே, உம்மிடத்தில் நாங்கள் மனம் வருந்தி அறிக்கை இடுகிறோம்.

நடத்துபவர்: எங்கள் மனந்திரும்புதலை ஏற்றுக் கொள்ளும், எங்கள் தப்பிதங்களை மன்னியும். மனிதத் தேவைகளுக்காகி துன்பங்களுக்கும் நாங்கள் குருட்டாட்டமாய் இருந்ததையும், அநீதியையும் வன்கொடுமையையும் கண்டும் அலட்சியமாய் இருந்ததையும் உம்மிடம் அறிக்கை செய்கிறோம்.

அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மனந்திரும்புதலை ஏற்றுக் கொள்ளும்.

நடத்துபவர்: பிறர் மீது உண்மையலலாத எங்கள் தீர்ப்புகளையும், அன்பற்ற எண்ணங்களையும் எங்களிடம் வேறுபாடு கொள்ளுகிறவர் மீது நாங்கள் கொண்ட முற்சார்புகள் மற்றும் வெறுப்புகளையும் உம்மிடத்தில் மனங்கசந்து அறிக்கை செய்கிறோம்.

அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மனந்திரும்புதலை ஏற்றுக் கொள்ளும்.

5. பாவ மன்னிப்பு

நடத்துபவர்: அன்பே மயமான கடவுள் நமது பாவங்களை நமக்கு மன்னித்து, நம்மை அவருக்கு நேராகத் திருப்பி, நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நித்திய அன்பை நமக்குக் கட்டளையிடுவாராக. ஆமென்.

6. திருமறைப் பாடம்

7. பாடல் / சிறப்புப் பாடல்

8. அருளுரை

9. அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணம்

10. காணிக்கைப் பாடல்

11. காணிக்கை ஜெபம்

12. பிறருக்கான மன்றாட்டு ஜெபங்கள்

சாம்பற்புதன் வழிபாட்டு முறைமை
06.03.2019

1. தொழுகைக்கு அழைப்பு

நடத்துபவர் : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

அனைவரும் : அவர் உம்மோடும் இருப்பாராக

திருமுன் வர மன்றாட்டு

அனைவரும் : கடவுளே, இந்த சாம்பற்புதன் அன்று , தவக்கால தொடக்கத்தில், உமது வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்கவும், எங்கள் பாவங்களைத் தாழ்மையாய் அறிக்கையிடவும், உமது அழைப்புக்கேற்ப வாழ பற்றறுதியில் நீர் எங்களை பலப்படுத்தவும் உமது திருமுன்னர் நாங்கள் வந்திருக்கிறோம்.

2. பாடல்

3. முறைமுறையே படிக்க: சங்கீதம் 103:8-18

நடத்துபவர்: நமது ஆண்டவர் கிருபையும் இரக்கமும் நிறைந்தவர், பேரன்பு மிக்கவர். அவர் ஒருபோதும் நம்மைக் குற்றப் படுத்த மாட்டார், என்றைக்கும் கோபம் கொண்டிரார்.

அனைவரும்: நாம் மண்ணிலிருந்து உருவானவர்கள் என ஆண்டவர் நினைவு கூருகிறார்.

நடத்துபவர்: அவர் நம் பாவங்களுக்குத் தக்கதாக தண்டிக்கவுமில்லை, நம் அக்கிரமங்களுக்குத் தக்கதாக சரிகட்டாலும் இருக்கிறார். ஏனெனில் பூமிக்கு வானம் எவ்வளவு உயரமோ அமமட்டும் தமக்கு பயப்படுகிற அனைவரோடும் அவர் அன்பில நிலைத்திருக்கிறார்.

அனைவரும்: நாம் மண்ணிலிருந்து உருவானவர்கள் என ஆண்டவர் நினைவு கூருகிறார்.

நடத்துபவர்: கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவாக நமது அக்கிரமங்களை அவர் நம்மிடமிருந்து அகற்றினார்.

அனைவரும்: நாம் மண்ணிலிருந்து உருவானவர்கள் என ஆண்டவர் நினைவு கூருகிறார்.

நடத்துபவர்: தந்தை தன பிளளைகளிடம இரங்குவது போல, தமக்கு பயப்படுகிற அனைவர் மீதும இரக்கமாய இருக்கிறார். நாம் மண்ணிலிருந்து உருவாக்கப் பட்டோம் என்பதை நினைவில வைத்துள்ளார்.